1987 ஏப்ரல் 21]

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் யாருடைய தொகுதியாக இருந்தாலும் சரி, அரசாங்கம் ஒரே கண்ணோட்டத்தில் வேலைகளை எடுத்துச் செய்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் வேலு சொன்னதைப் போல நாம் இலண்டன் மாநகருக்குப் போக வேண்டாம். தமிழ் நாட்டில் இருப்பதே சரியாக இருக்குமென்று நினைக்கிறேன்.

3. அறிக்கை அளித்தல்.

பொது நிறுவனங்கள் குழு.

டாக்டர் கே. சமரசம்: துணைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் கீழ்க்கண்ட அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்:

"இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1981-82 மற்றும் 1983-84-ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கைகளில் (வணிகம்) செய்தி, சுற்றுலாத் துறை தொடர்பான பத்திகள் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பத்தி மூன்றாம் அறிக்கை".

4. வரவு-செலவுத் திட்டம், 1987-88, வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண். 27—கதர்த்தொழில்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 27—கதர்த் தொழில் என்ற தலைப்பின்கீழ் ரூ. 3,76,95,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்".

திரு. கோ. வீரய்யன்: துணைத் தலைவர் அவர்களே, நாகை வட்டம் வேட்டைக்காரனிருப்பில் கதர்த் தொழில் துறையின் மூலம் செயல்பட்டு வரும் கதர் உற்பத்தி நிலையத்தை விரிவுபடுத்தி, உற்பத்தி செய்வது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 27.—கதர்த் தொழில் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,76,95,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".